31st July 1965] [Sri M. Bhaktavatsalam]

irrigation schemes furnished under Demand " XLII. Capital Outlay on Irrigation " on pages 32 to 34 of the statement placed on the table of the House. A number of other programmes relating to the augmentation of agricultural production also figure in the Supplementary Estimates. We have also, availed ourselves of the financial assistance offered by the Government of India under the Crash Programme and have provided for the sanction of loans to the extent of Rs. 15 lakhs to various local bodies for schemes relating to utilization of sewage water.

8. With a view to relieve the shortage in supplies of pulses and stabilise their price level, the Government have undertaken a big programme of purchase of gram and gramdhal from other State Governments and for their distribution in this State at fair prices. The State Governments of Punjab, Madhya Pradesh and Rajasthan have been kind enough to respond to our request for allotment of large quantities of gram and gramdhal. We have arranged for the procurement from these Governments of 81,600 tonnes, valued at Rs. 6.11 crores. Provision has been made for this purpose in the Supplementary Estimates. The outlay on this account will of course be covered fully in due course by receipts from sales to the public and there will therefore be no net financial liability to the State Government.

9. The other proposals included in the Supplementary Estimates do not call for any special comments apart from the detailed explanatory notes furnished in the statement.

10. With these words, Sir, I commend the Supplementary Estimates for the acceptance of the House.

VII.—DISCUSSION ON THE ANNUAL FINANCIAL STATEMENT FOR 1965-66 AND SUPPLEMENTARY FINANCIAL STATEMENT FOR 1964-65 OF THE MADRAS STATE ELECTRICITY BOARD—*cont.*

MR. CHAIRMAN : We will now resume discussion on the Electricity Board Budget.

DR. H. V. HANDE : On a point of order, Sir. There is a case pending in the Supreme Court. Any discussion on the labour policy might be contempt of the Supreme Court and the Hon. Chairman and all of us may be in trouble. The case pending in the Supreme Court is about the labour unrest in the State Electricity Board. Yesterday the Hon. Minister for Industries read out a sentence saying that the relationship between the employees and the Board was cordial. Sir, I think the Hon. Chairman and all of us will get into trouble if the relationship between the employees and the Electricity Board is discussed, because it is now sub-judice.

MR. CHAIRMAN : Does the Hon. Minister want to say anything?

THE HON. SRI R. VENKATARAMAN : I do not want to say anything.

MR. CHAIRMAN : Sri M. Sankaralingam Pillai will now speak.

* திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : கனம் தலைவரவர்களே, மன்றத்தின் பரிசீலனையில் இருக்கும் மின்சார போர்டு நிதி நிலை அறிக்கையைப் பற்றி எனது கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ளு வதற்கு முன்னால், நமது மாநில மின்சார அமைச்சுத் துறையும், மின்சார போர்டாரும் நமது மாநிலத்தில் மின்சாரத்துறை முன்னேற்றத்திற்காக ஆற்றிய பணிக்கு மக்கள் மத்தியிலேயுள்ள பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். உண்மை யிலேயே மின்சாரத்துறை வளர்ச்சி தான் நாட்டின் வளர்ச்சியை வெளிப்படையாக எடுத்துக்காட்டுகிற நிலையில் அமைகிறது. வெளி யேயிருந்து வருகிறவர்களுக்கும், இரயிலிலே பிரயாணம் பண்ணு கிறவர்களுக்கும், பல இடங்களில் மின்சார விளக்குகள் அழகாக எரிந்து கொண்டிருப்பதும், தொழில் நடந்து கொண்டிருப்பதும், நகரம் இருப்பதும், மக்களும் தொழிலும் வாழ்வதை சுட்டிக்காட்டு வதைப்போல் தொழிற் துறையில் உயர்ந்த முன்னேற்றத்தையும் பொருளியல் வளத்தையும் காட்டுகிறது. எனவே எத்தனையோ திட்டங்கள் இருக்கும்போது மின்சாரத்துறையைப் பெருக்கி, தொழில் வளத்தைப் பெருக்கி, நாட்டு வளத்தைப் பெருக்க முனைந் ததற்கு முதலில் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். மின்சார போர்டாரின் அறிக்கையிலே 10-வது பக்கத்தில் மூன்று வது திட்டத்தின் முதல் நான்கு ஆண்டுகளில் 28 கோடி ரூபாய் கிராமங்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்துவதற்குச் செலவிடப் பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நமது நாட்டில் எல்லா கிராமங்களுக்கும் இன்று மின்சார வசதி கிடைக்கவில்லை
3-40 p.m. என்பது ஒரு பெருங்குறையாகவே இருக்கிறது. மின்சாரத் துறை சிறந்த முறையில் செயல்படுகிறது, அதிக மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது, தொழிலுக்கும், தண்ணீர் இறைவைக்கும் அதிக மாகக் கொடுக்கப்படுகிறது. இருந்தாலும், கிராம மக்களுக்கு அந்த அளவுக்குக் கொடுக்கப்படவில்லை என்ற குறை இருந்துதான் வருகிறது. அதிலே 12-ம் பக்கத்தில் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் 22,000 கிராமங்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்படவேண்டும் என்றும் உறுதி சொல்லப்பட்டிருக்கிறது. நான் வசிக்கிற கிராமத்தில் மின்சார இணைப்பு தரப்பட்டு ஐந்து ஆண்டுகள் கழிந்து விட்டன, வீடுகளுக்கு. ஆனால் தெரு விளக்கு களுக்கு இன்று வரை மின்சார இணைப்பு கொடுக்கப்படவில்லை. கிராமங்களுக்கு கொடுக்கப்படுகிறது என்றால், தனியார் வீடு களுக்கு இணைப்பு கொடுப்பதோடு, கிராம இணைப்பு கொடுக்கப் பட்டு பூர்த்தியாகி விட்டது என்று அந்தக் கிராமங்களை எல்லாம் எண்ணிக்கையில் சேர்த்துக்கொள்ளுவது முறையல்ல என்று குறிப் பிடுகிறேன். நான் வாழுகிற கிராமமும் பஞ்சாயத்தும் 81 மின்சார விளக்குகளுக்கு விண்ணப்பம் செய்து, சம்பந்தப்பட்ட கோட்ட நில வருவாய் அதிகாரி அவர்கள் அந்த பஞ்சாயத்துக்கு அதை

நிர்வகித்துக்கொள்ளும் பொருளியல் வசதி உண்டு என்று சான்றிதழ் கொடுத்து இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையில் இன்னும், தெரு விளக்குகள் வரவில்லை என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தெரு விளக்குகள் வராததால் நாங்களே வீட்டிலேயிருந்து விளக்கு எடுத்துப் போட்டால், மின்சாரத்துறையினர், அது முறையற்றது, உங்கள் எல்லைக்குள் தான் போடலாம், என்று தடுத்து விடுகிறார்கள். அதனால், கிராமத் தெருக்களில் மின்சார விளக்கு போடுவதற்கு ஊக்கம் காட்டிக்கொண்டு வரவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதிலே அவர்கள் சொல்லுகிற ஒரே காரணம், மின்சார இணைப்புக்குரிய கருவிகள் சாதனங்கள் கிடைப்பதில்லை, அந்தக் காலதாமதம் தான் என்று சொல்லுகிறார்கள். எனவே அவைகளைப் பெருக்கிக் கொள்ள இனிமேல் அடுத்த ஆண்டு நிதிநிலையில், அதற்கு தகுந்த தொகை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தில் கிராம மின்சார இணைப்புக்கு இன்னும் 4 கோடி ரூபாய் செலவழிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. இருபத்தெட்டு கோடி ரூபாய் செலவு செய்தும், போதிய அளவு கிராமங்களுக்கு மின்சார இணைப்பு கிடைக்கவில்லை என்று குறை கூறும்போது, 4 கோடி அதற்குப் பற்றாது என்றும் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். கிராமங்களிலே இருக்கிற தெரு விளக்குகளுக்கு எரிந்தாலும் எரியாது போனாலும் மாதம் 2 ரூபாய் ஒரு விளக்கு வீதம் கட்டணம் கட்டவேண்டும். அவ்வாறு எரிகிற விளக்குகளில், பல்பு எரியாமல் போய், அல்லது வேறு குறை ஏற்பட்டாலோ, அதை நிவர்த்தி செய்ய இரண்டு மாதங்கள் வரை சில இடங்களில் ஆகிறது. அந்தந்தப் பகுதியிலிருக்கிற நிர்வாகத்துறையிலுள்ள குறைபாடுகள் தான் காரணம் என்று நினைக்கிறேன். நமது திறமைக்கு அந்த சிறு சிறு குறைகளும் இல்லாமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் இந்தத் துறையில் மின்சார உற்பத்திப் பெருக்கத்துக்கு, தூத்துக்குடியில் அனல் மின்சார நிலையம் ஒன்று ஏற்படுத்தப்படுவதை நிதிநிலை அறிக்கையில் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதை சபையில் சமர்ப்பிக்கும் போது அந்த அனல் மின்சார நிலையத்தை விரைவில் கட்டி முடிப்பதற்காக ராமகுண்டத்தில் அனல் மின்சார நிலையத்தைத் திறமையாக அமைத்த டாக்டர் தர்ம தேஜா அவர்களை அழைத்து, அவர்கள் செலவில் செய்யப்பட்டு, அதை போர்டாருக்கு அளித்து, அதைப் பல தவணைகளில் திருப்பி கொடுப்பது மாதிரி சொன்னதாக நினைக்கிறேன். இது அவ்வாறு இருக்குமானால், நாம் இப்போது எல்லாம் அரசாங்க, பொதுத் துறை இயக்கங்கள் ஸ்தாபனங்களை ஊக்குவித்து வருகிற நேரத்தில், ஏன் அவரது ஆலோசனையை எடுத்துக்கொண்டு, அவருடைய மேற்பார்வையில், அரசாங்கம் அல்லது போர்டு நேரடியாக நிர்வகித்துக் கொள்ளக் கூடாது? அவ்வாறு நிர்வகித்தால், திறமையாக அமையும் என்பதில் சந்தேகம் இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற் போல் இன்னும் மின்சக்தியின் தரத்தையும் அளவையும் பெருக்கிக்கொள்வதற்கு அணு மின் நிலையம் அமைப்பது பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அணு மின்சாரத்தைப் பற்றி சென்ற ஆண்டும் நான் குறிப்பிட்டேன். அணு உற்பத்தி செய்யும் சாதனங்கள் மிகுந்துள்ள பகுதிகளில் மேலும் ஒன்றிரண்டு ஏற்படுத்த முனையவேண்டும். எங்கள் கன்யாகுமரி மாவட்டம் குளச்சல் வட்டத்தில் மாக்னசைட், தோரியம் போன்ற பொருள்கள் மிகுதியாகக் கிடைத்து அவைகளைப் பல இடங்களுக்கு கொண்டு போகிறார்கள். அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டேன். போர்ட்டார் எடுத்த நடவடிக்கைகள் என்ற புத்தகத்தில், அதற்கு எதிராக, இதை மத்திய அரசாங்கம் பரிசிலனை செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் தான் பரிசிலனை செய்யவேண்டும் என்றாலும், நாம் பரிசிலனை செய்து, அவர்களை பரிசிலனை செய்யும்படி சிபாரிசு செய்து தூண்ட வேண்டுமென்றும், அதைப் பரிசிலனை செய்வதற்குரிய எக்ஸ்பெர்ட்ஸ் என்று சொல்லும் திறமை வாய்ந்தவர்களை நியமித்து வேண்டுவன செய்ய நான் வேண்டிக்கொள்கிறேன். இவ்வாறு நாம் மின்சாரத்துறையில் கிராமத்துக்கு முதல் முன்னிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIAR: Mr. Chairman, Sir, I am one of those who strongly believe that our State has advanced very greatly in the matter of giving electricity to the people in rural areas when compared with the other States in the Indian Union. Electricity connections have been given to such a large extent in the rural parts that there has been wholesale appreciation throughout and other States are jealous and envious of our progress. I must pay my encomiums to the department and also to the Chairman of the Board in particular, for the expeditious work and for the efficient manner in which the work is going on throughout the length and breath of our State.

But, Sir, there may be lapses here and there. Lapses do mean that have been lapses in giving connections to the rural areas. But it may also be said that there has been some delay in giving connections for pumpsets, etc. On enquiry into the whole thing, I was given to understand that for want of materials there has been delay in giving connections. Probably this will be overcome within a very short time and I hope the Government and the Board will take particular care to see that we get some foreign exchange which is needed, and that we produce more materials with a view to giving early connections. This is the only thing that can be said if at all anything should be said about the budget. Otherwise I must congratulate the department and pay them encomiums for the excellent work that has been done.

One point which I would like to emphasise in this connection is this. The Government are very serious to step up food production. If they are serious in stepping up food production, the agriculturists in the dry areas, who are using pumpsets, should not be charged anything at least till such time as we overcome the food crisis. There is a lot of difference between the deltaic areas and the dry areas of North Arcot, Ramanathapuram, portions of Chingleput and Salem where at least for the second crop, some concession must be shown. Otherwise there would not be any incentive for producing more food. We are now subsidising a lot for imported food and losing foreign exchange. Instead of this, if we give some more incentive to the ryots and give concession, that will go a long way to step up food production. I may tell you, Sir, that to-day cultivation under lift irrigation will not at all be paying. As a practical agriculturist I have worked out the profit and loss account and I can speak with authority and say that cultivation under lift irrigation will not pay. So, I would request the Hon. Minister in charge to take into consideration very seriously this question and see that some concession or other is given to the agriculturists so far as the dry areas are concerned.

With regard to the service, I have been telling this House previously that there should be no cut in electricity so far as the agriculturists are concerned. I am glad to know that we have overcome the difficulty now. Even if there is going to be an increased number of connections, electricity should not be cut off in the day and agriculturists should be allowed to work in the day and not in the night. This is all my submission, Sir.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, மின்சார போர்டு நிதிநிலை அறிக்கை மீது ஒன்றும் விசேஷமாகக் குறை சொல்லுவதற்கான நிலைமையில் அந்த போர்டு நிர்வாகம் இல்லை என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் விவசாயிகள் என்ற முறையில் எங்களுக்கு உடனடியாக உபகாரமாக இருக்கக்கூடிய ஒரு டிபார்ட்மெண்டு என்னவென்றால், இந்த மின்சார டிபார்ட்மெண்டுதான். அதிலே நண்பர் இராமசாமி முதலியார் சொன்னது மாதிரி, இராமநாதபுரம் போன்ற டிரை—மானாவாரியாக இருக்கிற ஜில்லாக்களில் கிணறு வெட்டி, பம்ப்செட் வைத்து அதன் மூலம் விவசாயம் செய்தால்தான் அது உபயோகமாகவும் லாபகரமாகவும் இருக்கிறது. அந்தமாதிரி ஒரு விவசாய முறையை ஊக்குவிப்பதற்கு மின்சார போர்டு இன்னமும் உதவியாக இருக்கவேண்டுமென்று நான் ஆசைப்படுகிறன். அந்த முறையில் மின்சார போர்டின் உதவியானது எல்லா இடங்களிலேயும் இருந்தாலும், பெரும் கிராமங்களில் பம்ப்செட்டுகள் வைக்க, லைன்கள் போடுவதற்கு, கியாரண்டி கொடுத்து, எல்லாவித கண்டிஷன்களையும் பூர்த்தி செய்யத் தயாராயிருக்கிறார்கள். ஆனால் சில குக்கிராமங்

களில் கிணறு வெட்டி பம்ப் செட் போட கியாரண்டி—ஹார்ஸ்பவர் கியாரண்டி கொடுக்காததால் அந்த கிராமங்களுக்கு இன்னும் மின் சாரம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இந்த காரண்டி (guarantee) முறை இருந்தாலும் இல்லாவிட்டாலும், சின்னச் 3-50 p.m சின்ன கிராமங்களுக்கெல்லாம் மின்சாரம் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தனியார் துறையில் இருக்கும் மின்சார சப்ளை கம்பெனிகளை அதிசீக்கிரமாக சர்க்கார் எடுத்துக்கொண்டால் நல்லது என்று அபிப்பிராயப்படுகிறேன். அவைகளை எடுத்துக் கொள்வதற்கு வேண்டிய பணம் நான்காவது திட்டத்தில் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்றும், அவைகளை சர்க்கார் எடுத்துக்கொள்ளப் போவதாகவும் கனம் அமைச்சர் தம் அறிக்கையில் கூறியிருக்கிறார். இதை வரவேற்கிறோம். அவற்றை எவ்வளவு சீக்கிரத்தில் சர்க்கார் எடுத்துக்கொள்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவைகள் இருக் கும் பிராந்தியங்களிலுள்ள மக்களுக்கு நலமாக இருக்கும்.

கனம் அங்கத்தினர் திரு. சங்கரலிங்கம் வீதிகளிலுள்ள மின்சார விளக்குகளைப் பற்றிக் குறிப்பிட்டார். கனம் அமைச்சர் சமீபத் தில் எங்கள் ஊருக்கு வந்திருந்தபோது, எங்கள் முனிசிபாலிடி யைப் பற்றி சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. எங்கள் கிராமத்தில் வீதி விளக்குகளுக்கு ஸ்க்ரூ போட்டு சர்க்கார் பல்பு கள் போடுகிறார்கள். சாதாரணமாக எங்களுக்கு அந்த மாதிரி யான பல்புகள் கிடைப்பதில்லை; கிடைத்தாலும் அவைகளைப் பொருத்த முடிவதில்லை. எங்கள் கிராமத்தில்கூட, வரியை நாங் கள் கட்டிவிட்டாலும் பல நாட்கள் வீதியில் மின்சார விளக்குகள் எரிவதில்லை. அந்த மாதிரியான நிலைமை விருதுநகரில்கூட இருப்பதாக கனம் அமைச்சரிடம் தெரிவித்தோம். இதுபற்றி விசாரித்தால் "பல்புகள் ஸ்டாக்கில் இல்லை" என்று அதிகாரிகள் பதில் சொல்கிறார்கள். பல்புகள் இருந்தால், copper wire இல்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். சில சமயங்களில், 'அலுமினியம் இல்லை, அலுமினியம் வந்தால்தான் தேவையான சாமான்களைத் தயாரிக்க முடியும்' என்று அவர்கள் சொல்கிறார்கள். எத்தனையோ சௌகரியங்கள் செய்துகொடுத்தாலும், தெரு விளக்கு கள் பல்புகள் இல்லாமல் இருந்தால் மிகவும் சங்கடமாக இருக் கிறது. இது மிகவும் வருந்தத்தக்க விஷயம். இதை மின்சார போர்டு சேர்மனும் சம்பந்தப்பட்ட மற்றவர்களும் கவனித்தால் நன்றாக இருக்கும்.

இந்த வருஷம் நாங்கள் குற்றாலத்தில் இருந்தபோது, மின்சார வெட்டு இந்த வருஷம் கட்டாயம் வந்துவிடும் என்று எதிர்பார்த் தோம். ஆனால் அதிர்ஷ்டவசமாக மின்சார போர்டார் வெட்டு வராமல் எப்படியோ சமாளித்து விட்டார்கள். நீர்ப் பகுதிகளில் தெர்மல் பவரை அதிகமாக உற்பத்தி செய்ததால், மழை இல்லாவிட் டாலும் மின்சார வெட்டு வராதபடி செய்ய முடிந்தது. மின்சார

31st July 1965] [திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்]

வெட்டைத் தடுப்பதற்கு ஒவ்வொரு வருஷமும் நீர்த்தேக்கங்களி லுள்ள மின்சார விசையை நம்பிக்கொண்டிருக்காமல் அனல் மின் நிலையங்களிலிருந்து போதிய மின்சாரம் கிடைக்கச் செய்தால் எங்களுக்கு நலமாக இருக்கும். நாங்கள் பருத்தியை வாங்கி அதை பஞ்சு வேறு விதை வேறாகப் பிரிக்கிறோம். சாதாரணமாக மின்சார வெட்டு வரும்போது இந்த விதையை விற்பதில்லை. மின் சார வெட்டு ஒரு மாதம் இருந்தால், விலை 10 அல்லது 15 ரூபாய் உயர்ந்து விடும். பொருளாதார ரீதியில் பார்த்தால் இந்தக் காலங்களில் சாதாரண 'consumer articles' கூட இந்த மாதிரி விலை உயர்ந்து விடுகின்றன என்பதை நான் வியாபாரி என்ற முறை யில் சொல்லிக்கொள்கிறேன். மின்சார வெட்டு வராமல் இருந்தால் வியாபாரிகளுக்கு சௌகரியமாக இருக்கும். அந்தக் காலங்களில் நிலக்கடலை எண்ணெய் வியாபாரிகள் எண்ணெய்யை டின்களில் அடைந்து வைத்துவிட்டு சும்மா இருந்து விடுவார்கள். எனவே, இனிமேல் மின்சார வெட்டு வராமல் இருப்பதற்கு எல்லா ஏற்பாடு களும் செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள் கிறேன். என் நல்வாழ்த்துக்களை மின்சார போர்டு நிர்வாகத் திற்குத் தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார்: மதிப்பிற்குரிய தலைவர் அவர் களே, மின்சார போர்டு வரவு செலவுத் திட்டத்தை மகிழ்ச்சி யுடன் வரவேற்று ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 'வான் பொய்ப்பினும் தான் பொய்யாது காவிரியாறு' என்று புலவர்கள் பாடியிருக்கிறார்கள். பருவம் தவறும் காலத்திலும் கூட மின்சார வெட்டு வராது என்ற உண்மையை இந்த ஆண்டு மின்சார போர்டார் நிலைநாட்டியிருக்கிறார்கள். பருவ மழை தவறியதால் இங்கே மின்சார வெட்டு வருமோ என்று மக்கள் அஞ்சியபோது குறைந்த வசதிகளை வைத்துக்கொண்டு தங்கள் திறமையாலும் விடாமுயற்சியாலும் பேருழைப்பாலும் மின்சார வெட்டு வாராதபடி செய்த கனம் அமைச்சருக்கும் மற்றவர்களுக் கும் விவசாயிகள் சார்பில் பாராட்டுதலைத் தெரிவிக்க ஆசைப்படு கிறேன்.

மின்சார விஷயத்தில் குடியானவர்களுக்கு பல தொல்லைகள் இருப்பதாக நாங்கள் பல முறை சொல்லி வந்திருக்கிறோம். இந்த விஷயத்தில் இப்போது நிர்வாகத்தில் முன்னேற்றம் காணப்படு கிறது. குறிப்பாக எங்கள் மாவட்டத்தில் டிவிஷனல் எஞ்ஜினி யர்களிடத்திலோ அசிஸ்டெண்ட் என்ஜினியர்களிடத்திலோ நாங் கள் மக்களுக்கு சிபாரிசுக்குப் போக வேண்டிய நிலைமை இல்லை. ஒரு குடியானவன் போய் அதிகாரிகளிடம் சொன்னாலும் அவர்கள் உடனே ஆளை அனுப்பி குறைகளைக் கவனித்து விடுகிறார்கள். அந்த அளவில் நிர்வாகத்திலும் முன்னேற்றம் காணப்படுகிறது என்று மனப்பூர்வமாக கூறுவேன். இருந்தாலும் சிறிய ஊழியர்கள் சில சிறு சிறு தப்புகள் பண்ணுகிறார்கள். "கள்வன் பெரியவனா?

காப்பான் பெரியவனு ?" என்று சொல்லப்படுவதுண்டு. ஃப்யூஸ் எடுப்பவர்கள் ஃப்யூஸ் போடுபவர்கள் போன்றவர்கள் குடியான வர்களுக்கு சிறு சிறு தொல்லைகள் தருகிருர்கள். இத்தகைய குறைகளும் நீக்கப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

எங்கள் ஊரில் 4, 5 ரூபாய் அளவில் இருந்த மின்சாரக் கட்ட ணங்கள் சமீபத்தில் திடீரென்று 5, 10 ரூபாய் அளவிற்கு உயர்ந் திருக்கின்றன. மின்சாரச் செலவைக் கணக்கு எடுப்பவர்கள் தப்பாகக் கணக்கு எடுத்தார்களா அல்லது மின்சார போர்டு மீட்டர் சரியாக இல்லையா என்று கவனிக்க வேண்டும் என்று நாங்களே அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறேம். இதையெல்லாம் கவனித்தால் இந்த நிர்வாகத்தின் திறமையை நன்ருக பாதுகாக்க முடியும்.

மேலும், கனம் உறுப்பினர் ஸ்ரீ ராமசாமி முதலியார் அவர்கள் கூறியது போல விவசாயிகளுக்கு பகல் நேரத்தில் எவ்வளவு மின் சாரம் கொடுக்க முடியுமோ அவ்வளவு மின்சாரம் கொடுப்பதற்கு எல்லா வழிகளையும், இவ்வளவு திறமையுடன் பணியாற்றும் இந்த நிர்வாகத்தினர் கண்டுபிடித்தால், இவர்களுடைய பெருமையை நன்ருகப் பாதுகாக்க முடியும் என்று விவசாயிகள் சார்பில் சொல்லிக்கொள்கிறேன். இயந்திரங்களுக்கு இராக் காலங்களில் மின்சாரம் வழங்கலாம். விவசாயம் இரவில் செய்யமுடியாத ஒரு தொழில். மேலும், இப்போது கிராமங்களில் உழவிற்கு ஆட்கள் கிடைப்பதில்லை. பட்டணங்களில் கூலி அதிகமாகக் கிடைப்பதால் எல்லோரும் பட்டணங்களுக்கு வந்து அங்கே குடியேறிவிடு கிருர்கள். நாகரிகம் வளர்ந்துவருகிறது. மண்ணையும் சேற்றையும் தொட யாரும் விரும்புவதில்லை. இரவில் டார்ச் லைட்டுடன் சென்று வரப்புக் கட்டலாம் என்ருல் அதற்கு ஆட்கள் வருவதில்லை. இரவு நேரத்தில் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதில் தொந்திரவுகள் இருக்கின்றன. ஆகையால், குறைந்த வசதிகளை வைத்துக் கொண்டு யாருக்கும் மின்சார வெட்டு இல்லாதபடி செய்ததுபோல, விவசாயிகளுக்கு பகலில் நிறைய மின்சாரம் வழங்க வகை செய் தால் நல்லது. தொழிற்சாலைகள் பகுதிக்கு சில வேளைகளில் 4-00 p.m. மின்சார சப்ளையை நிறுத்திலுைம் பரவாயில்லை. எப்படியாவது பகலில் அதிக அளவு மின்சாரம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இங்கு நேற்று பலர் இதைப்பற்றி பேசினர்கள். தனியார்துறையில் உள்ள மின்சாரம் குறிப்பாக விவசாயிகளுக்கு ஒரு பெரிய தலைவலியாக இருக்கிறது. நம்முடைய அரசாங்கத்தில் குறைந்த அளவு கட்டணம் இருந்தது. மோட்டார் ஓடினலும் ஓடாவிட்டாலும் இவ்வளவு கட்ட வேண்டு மென்று இருந்தது. விவசாயிகளுக்கு ஊக்கமளிப்பதற்காக அதை நாம் நீக்கிவிட்டோம். தனியார் துறையில் அந்தக் குறைந்த அளவு கட்டணம் இல்லை. ஏரி குளங்களில் தண்ணீர் உள்ள காலங்களில் மழை காலங்களில் மோட்டார் ஓடாதபொழுது

குறைந்த அளவு கட்டணத்திற்கும் சர்சார்ஜ் கொடுக்கவேண்டு மென்று தொந்திரவு செய்கிறார்கள். சென்ற ஆண்டு ஒரு கிராமத் திலுள்ள விவசாயிகளிடமிருந்து இதை நிறுத்தவேண்டுமென்று அரசாங்கத்திற்கு மனு வந்தது. அதன்மேல் முடிவான யோசனை என்ன செய்தார்கள் என்று இதுவரையில் தெரியவில்லை. எப்படி பார்த்தாலும் தனியார்துறை என்பது விரும்பத்தக்கது அல்ல. அவர்கள் தரகர்களைப்போல் இருக்கிறார்கள். மின்சாரத்தை வேண்டியபோது வேண்டிய இடங்களுக்கு விஸ்தரிக்க வேண்டு மானாலும் அரசாங்கம் கடன்கொடுத்தால்தான் செய்வோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். குறைந்த அளவு பணத்தைப் போட்டு இப்படித் தேவைப்படும்போது தேவையை நிறைவேற்றாமல் தரகர் களைப்போல இருப்பதற்கு அவர்கள் யார்? இவர்கள் தங்கள் பொருளாதாரத்தை வைத்து அதை சரிவர நடத்தவில்லை என்றால் அதற்கான காரணத்தைக் காட்டி அவர்களுக்குள்ள ஒப்பந்தத்தை முடித்து ஏன் அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக்கூடாது? நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் வரையில்கூட காத்திருக்க வேண்டிய தேவையில்லை. அவர்கள் பொருளாதாரத்தை வைத்துக்கொண்டு நிர்வாகத்தை சரிவர நடத்தவில்லையென்றால் அதைக் காரணமாக வைத்து அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து விட்டு அவற்றை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி மின்சார போர்டுக்கு நன்றி தெரிவித்து விவசாயிகளுக்கு பகலில் மின்சாரம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்: தலைவர் அவர்களே, மின்சார போர்டு சம்பந்தமாக 1965-66-ம் வருஷத்து, 1964-65-ம் வருஷத்து ஃபைனான்ஷியல் ஸ்டேட்மெண்டை பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்போது எலக்ட்ரிசிடி போர்டு வேலை செய்வது ரொம்ப சிறந்ததுதான். அதையெல்லாம் நாம் ஒப்புக் கொள்ளவேண்டியதுதான். ஆனால் அந்த வேலைகளி னால் யாருக்கு லாபம், யாருக்கு நஷ்டம் என்பதுதான் இப்போ தைய கணக்கு. அப்படி பார்க்கிறபோது விவசாயிகளுக்கு நஷ்டம் தான். லாபம் இல்லை. விவசாயிகள் சொல்லமுடியாமலும் எப்படிச் சொல்வது என்று தெரியாமலும் இருக்கிறார்கள். தனியாக சில பேர் அங்கங்கு கேட்கிறார்களே தவிர, அவர்களிடம் ஒற்றுமை இல்லை. மற்றவர்களைப்போல அவர்களுக்கு சங்கம் இல்லை. அவர்கள் கஷ்டத்தை எடுத்துச் சொல்ல வழியில்லாமல் இருக்கிறார்கள். அவர் களிடம்தான் நாம் அதிக பணம் வாங்குகிறோம். சொல்லத் தெரிந்த வரிடம் இந்த சர்க்கார் ஒன்றும் செய்வதில்லை. மற்ற தொழில் களுக்குக் கொடுப்பதுபோன்ற வசதிகள் விவசாயிகளுக்கும் கொடுக்கவேண்டுமென்று நான் சொல்லிக்கொண்டு வருகிறேன். முன்பைவிட இப்போது கரண்டு விலை ஏறிவிட்டது. முன்பு 3 நயாபைசா கட்டினோம். இப்போது எட்டு நயாபைசா கட்டு கிறோம். பத்து ஹார்ஸ் பவர் பம்பு ஓட இப்போது ரூ. 150 ஆகிவிடு

கிறது. ஏனென்றால் கரண்டு விலை ஜாஸ்தியாகிவிட்டது என்கிறார்கள். ஐந்து பைசாவிலிருந்து 8 நயா பைசாவாக உயர்ந்துவிட்டது. விவசாயிகளைக் காப்பாற்றுகிறோம் என்றால் என்ன அர்த்தம்? எதை எப்படிச் செய்தாலும் விவசாயிகளுக்கு வரும்போது மட்டும் குறைத்துக் கொடுக்கவேண்டும். இதை போர்டார்தான் பார்த்துக் கொள்ளவேண்டும். விவசாயிகளுக்கு யூனிட்டுக்கு சார்ஜி நான்கிலிருந்து எட்டாக உயர்ந்து விட்டதால் இப்போது நெல் பயிர் யாரும் அதிகமாக விவசாயம் செய்வதில்லை. ரொம்ப பேர் விட்டுவிட்டார்கள். பிறகு எங்கிருந்து நெல் வரும்? எங்கள் தாலுகாவில் நெல் அதிகம் பயிர் செய்வதில்லை. மாட்டுக்கு வைக்கோலுக்கு வேலை ஆட்களுக்கு பகல் உணவு வேண்டுமென்பதற்காக மாத்திரம் மூன்று ஏக்கர், இரண்டு ஏக்கர் மட்டும் பயிர் செய்கிறார்கள். ஆகையால் இந்த கரண்டு விலையேற்றத்தால் நெல் விவசாயம் குறைந்துவிட்டது. விவசாயிகளைக் காப்பாற்றுகிறோம் என்று சொல்வதைத்தான் கேட்கிறோம். ஆனால் ஒன்றும் செய்வதாகத் தெரியவில்லை. போர்டுதான் செய்யவேண்டுமென்று சும்மாயிருக்கக்கூடாது. நீங்கள் போர்டாரிடம் கரண்டு வாங்கி விவசாயிகளுக்கு குறைத்துக் கொடுங்கள். போர்டில் விவசாயிகளிடம் மினிமம் சார்ஜ் கன்டிஷன் எழுதி வாங்கினார்கள். அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. எங்களுக்கும் மாதம் ரூ. 250 கொடுக்கிறீர்களே என்பதற்காக நானும் ஏதாவது சொல்லவேண்டுமென்று சொல்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நீங்கள் பெரியவர், என்ன சொன்னாலும் கேட்கிறோம்.

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார் : பெரியவர்கள் சொல்வதைக் கேட்டால் நாடு ஏன் இப்படி ஆகிறது. நாங்கள் சொல்லிக் கொண்டே இருக்கவேண்டியதுதான்.

மிஸ்டர் சேர்மன் : அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகருமே!

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார் : ரொம்ப அடித்தால் இந்த அம்மி உடைந்து போய்விடும். இப்போது போர்டார் விவசாயிகளிடம் எழுதி வாங்கும் மினிமம் சார்ஜ் கண்டிஷனில் தப்பு நிறைய இருக்கிறது. மினிமம் கரண்டு சார்ஜி ஓர் ஹார்ஸ் பவருக்கு ஒரு வருடத்திற்கு இவ்வளவென்று நிர்ணயித்து ஐந்து வருடத்திற்கு கட்டிவர வேண்டுமென்று எழுதப்பட்டிருக்கிறது. ஒரு வருடம் அந்த கணக்குப் படி கட்டத் தவறினால் வசூல் செய்து விடுகிறார்கள். ஒரு வருடம் அதிகப்படி கட்டினால் அதை அடுத்த வருட கணக்கில் கொண்டுபோய் சேர்ப்பதில்லை. இது வருடா வருடம் அக்ரிமெண்டே தவிர ஐந்து வருடங்களுக்கு அக்ரிமெண்டு

அல்ல. விவசாயிகளுக்கு பம்பு செட்டு கனெக்ஷன் கொடுக்கும் போது எழுதி வாங்குகிறார்களே, அக்ரிமெண்டு அது ரொம்பவும் விவசாயிக்கு துணையானது. விவசாயிகளுக்கு என்ன தெரியும்? எப்படியாவது கொடுத்தால் போதும் என்று கையெழுத்துப் போட்டு வாங்கிக் கொண்டு போகிறார்கள். ஆகையால் அக்ரிமெண்டை மாற்றவேண்டும். அதனால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால் விவசாயிகளுக்கு இந்த எலக்ட்ரிசிட்டி போர்டு நன்மை செய்யவில்லை. தீமைதான் அதிகமாகச் செய்திருக்கிறார்கள். வீட்டுக்குக் கொடுப்பது போன்றவைகளுக்கு எல்லாம் உங்கள் சௌகரியம்போல செய்யலாம். அதைப்பற்றி விவசாயிகளுக்குக் கவலையில்லை. விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும். விவசாயிகளிடமிருந்து லாபமடையவேண்டுமென்று நினைக்கிறீர்களே தவிர அவனைக் காப்பாற்ற நினைக்கவில்லை. அவன் உணவு பயிர் செய்யவில்லை என்றால் உணவுப் பஞ்சம் ஏற்படுமே என்று அரசாங்கம் அந்தப் பஞ்சத்தை தடுப்பதற்காக அவனைக் காப்பாற்றுவதாக சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இங்கே போர்டு சேர்மன் ஐயா இருக்கிறார்கள், மந்திரி அவர்களும் இருக்கிறார்கள். அதனால்தான் நான் இதையெல்லாம் பேசினேன். எலக்ட்ரிசிட்டி அபிவிருத்தி செய்கிறீர்களே, அந்த அளவுக்கு விவசாயிகளுக்கு லாபம் வேண்டாமா? ஜாஸ்தி செய்துவிட்டோம் என்று பெருமையாகப் பேசிக்கொண்டிருப்பதில் என்ன பலன்? அபிவிருத்தி ஆக ஆக விலை குறையுமென்று நினைத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் அது ஏறிக்கொண்டுதான் இருக்கிறது. கரண்டு அதிகமாக உற்பத்தி ஆக ஆக, இங்கே வந்தால் விலை ஜாஸ்தியாகிக் கொண்டிருக்கிறது, குழந்தை குட்டிகள் ஜாஸ்தியாகிறது என்று சொல்லுவது போல்—அதற்காகப் பெற்றுக் கொள்ளாதே என்று சொல்லுவது போல் அந்தக் கதை வந்து விட்டது. அபிவிருத்தி, அபிவிருத்தி என்றால் என்ன? அபிவிருத்தியானால் நாம் நிம்மதியாக இருக்கவேண்டும். அபிவிருத்தி ஏற்பட்டால் அழ வேண்டியிருக்காது. சுகமாக வாழ்வதற்கு எல்லாம் வேண்டுமென்றால், விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென்றால், அந்த ரேட்டைக் குறைத்துக் கொள்ள வேண்டும். அடுத்த தடவையாவது குறைத்துக் கொடுக்க வேண்டும் என்று இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்டர் கனம் திரு. வெங்கட்ராமனை தயவாகக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் செய்யாமல், போர்டிடம் தள்ளுகிறீர்கள். தங்கவேல் முதலியார் இப்படியெல்லாம் மல்லுக்கு நிற்கிறார், ஏதாவது செய்யுங்கள் என்று சொல்லி, விவசாயிகளுக்கு வேண்டிய நன்மையைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னை பேச அனுமதித்த தலைவர் அவர்களுக்கு வணக்கம் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : The house will now adjourn and meet again at 3 p.m. on Monday, August 2, 1965. 4–10 p.m.